பயிற்சி பெற மறுக்கிறார்கள் என்ற அடிப்படையில் அவர்களின் பயிற்சியை மருத்துவக் கல்லூரியினுடைய மேலாளர் அவர்கள் உடனடியாக நிறுத்தியிருக்கிறார்கள். பயிற்சி காலத்திலேயே பயிற்சிக்குரிய பாட வேலைகளைச் செய்ய மாட்டோம் என்று சொல்வது பயிற்சி பெறுகிறவர்களுக்கு அழகல்ல. அவர்களுக்கு ஆதரவாகவும், தூண்டி ஓரளவுக்கு ஊக்கப்படுத்தியும் எம்.என்.ஓ.க்கள் 2 ஆம் தேதி முதல் வேலை நிறுத்தம் செய்வதாக அறிவித்தார்கள். இங்கே, அந்த எம்.என்.ஓ.க்களின் தலைவர் வந்தபோது, நாங்கள் வேலை நிறுத்தம் செய்யவில்லை என்று சொன்னார்கள். ஏதோ ஒரு காரணத்தால், வேலை நிறுத்தம் செய்ய எண்ணினாலும் 3 ஆம் தேதி வேலை நிறுத்தம் இல்லை, என்று தெரிவித்தார்கள். ஆகவே, இப்போது சகஜ நிலைமை—அமைதியான நிலை தோன்றி இருக்கிறது. பயிற்சி பெறுகிறவர்கள் எப்படிப் பயிற்சி பெற வேண்டுமோ, அப்படிப் பயிற்சி பெற மாட்டோம் என்று சொல்வார்களேயானால் அவர்களுக்குப் பயிற்சி அளிக்க எந்த அரசாங்க இலாக்காவாலும் முடியாது. செவிலி உதவிப் பணியாளர்களாக உள்ளவர்கள் தான் அப்படிச் செய்ய வேண்டும் என்று பாட திட்டம் இருக்கிறது. நாங்கள் அப்படிச் செய்யமாட்டோம் என்று சொல்கிறார்கள். பாடத் திட்டத்திலேயே, வேலை முறையிலேயே அந்தப் பணி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணியை மற்றவர்களிடம் மாற்ற வேண்டுமென்கிறார்கள்.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலே 114 நர்சிங் அஸிஸ்டண்டுகள் இருக்கிறார்கள். இவர்களுடைய வேலையை லஸ்கர்களிடம் கொடுக்க வேண்டுமென்கிறார்கள். அங்கே 10 லஸ்கர்கள் இருக்கிறார்கள். இந்த 114 பேர்கள் வேலையை அந்தப் பத்து பேர்களிடம் விட வேண்டும் என்றால், மருத்துவ மனை துப்புரவு செம்மையாக இருக்காது. ஆகவே, அப்படி அவர்களிடத்திலே தான் கொடுக்கப்பட வேண்டுமென்ற ஒரு கருத்து ஏற்றுக்கொள்ளப்படுவதாக இருந்தால் 114 பேரில் 20 பேரையாவது குறைத்துவிட்டு, 20 லஸ்கர்களை அந்த இடத்தில் நியமிப்பது பற்றி கவனித்தாக வேண்டும். மருத்துவ மனையிலுள்ள நோயாளிகளின் நன்மையை யாவரும் கருத வேண்டும். மேலும் அவர்கள் கொடுத்துள்ள வேண்டுகோளை அரசாங்கம் பரிசீலனை

செய்து வருகிறது. முடிந்தால், கோரிக்கை நியாயமானதாக இருந்தால், அவற்றை அரசு ஏற்றுக்கொள்ளும் என்பதாலும் இப்போது வேலை நிறுத்தம் இல்லை என்ற காரணத்தாலும் இப்படிப்பட்ட ஒத்திவைப்பு நடவடிக்கைக்கு அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்குப் பின்பு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியமில்லை என்று கருதி, அத்தீர்மானத்திற்கு அனுமதியை மறுக்கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

(அ) பாபநாசம், மணிமுத்தாறு நீர்த் தேக்கத்தில் இருந்து அட்வான்ஸ் கார் பயிருக்கு அளவுக்கு மேல் நீர் கொடுப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ச. சங்குமுத்து தேவர் அவர்கள், சட்டப் பேரவை விதி 41-ன் கீழ் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவார்.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 41-ன் கீழ் கீழ்க்கண்ட அவசர பொது முக்கியமான காரியத்தைக் கொண்டு வருகிறேன்.

திருநெல்வேலி மாவட்டம், [illegible] ஆம் வருடம் ஏப்ரல் மாதத்தில் அட்வான்ஸ் கார் பாசனத்திற்காக பாபநாசம், மணிமுத்தாறு நீர்த் தேக்கத்திலிருந்த நீரை கீழ் பாசனத்திற்காக அளவுக்கு மேல் உபயோகப்படுத்தியதால் அம்பாசமுத்திரம் தாலுகா, திருநெல்வேலி பகுதியில் உள்ள விவசாயிகள் அடுத்துவரும் மாதங்களில் அடைந்த பெரும் நஷ்டத்தையும் இதனால் ஆண்டுதோறும் விவசாயம் பாதிக்கப்படுவதையும் கவனிக்க வேண்டிய அவசரப் பொது முக்கியமான காரியத்தைப் பற்றி மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, கோடை காலத்தில் தாமிரவருணி ஆற்றில் வரும் நீரைப் பயன்படுத்திக் கொள்ளும்பொருட்டு, மருதூர்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டுகளின் கீழ்ப்பகுதியில் உள்ள ஆயக்கட்டுப் பகுதியில் தாமிரவருணி ஆற்றுப்பாசன முறையின் கீழ் முன் கார் சாகுபடி செய்யும் திட்டம் நீண்ட காலமாகச் செயலில் இருந்து வந்துள்ளது. பாபநாசம் நீர்த்தேக்கம் கட்டப்பட்ட பின்னர், கோடை மாதங்களில் அந்த நீர்த் தேக்கத்தின் மூலம் கிடைக்கும் மின்சக்தியும் முன் கார் பயிரிடுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

முன் கார் சாகுபடி செய்யும் பிரச்சினைக்குக் கூடுமானவரை இணக்கமான முறையின் தீர்வு காணும் பொருட்டு, தாமிரவருணி ஆற்றுப்பாசன முறையின் மேல்பகுதி, கீழ்ப்பகுதி ஆயக்கட்டு தாரர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், விவசாயிகள் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்ட கூட்டம் ஒன்றைத் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் 8—2—[illegible]-ல் கூட்டினார். கூட்டத்தின் முடிவில் மார்ச் திங்கள் இறுதியில் நீர்த்தேக்கத்தில் உள்ள நீரின் அளவைக் கருத்திற்கொண்டு ஒவ்வோர் ஆண்டும் முன் கார் சாகுபடிக்காக அனுமதிக்கப்படும் பரப்பளவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளே முடிவு செய்ய விட்டுவிடப்பட வேண்டுமென்றும், ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாதத் தொடக்கத்தில் தாமிரவருணி ஆயக்கட்டில் விதைப் பாத்திகள் அமைப்பதற்காக ஆற்றுக்கு மேற்பகுதியில் இருக்கும் ஆயக்கட்டு தாரர்களின் தேவையை நிறைவு செய்யப் பாபநாசம் நீர்த் தேக்கத்தில் சுமார் 500 மில்லியன் கன அடி நீர் சேமித்து வைத்திருக்கப்பட வேண்டுமென்றும் அக்கூட்டத்திற்கு வந்த பிரதிநிதிகளும் ஏனையோரும் ஒருமுகமாக ஒப்புக் கொண்டனர். இந்த முடிவின் அடிப்படையில், முன் கார் சாகுபடிக்கான பரப்பை முடிவு செய்யும் பொதுவான பிரச்சினை குறித்து அவசியமான செயற்குறிப்புகளை அரசுக்குத் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பி வைத்தார். இச்செயற் குறிப்புகளை அரசு பரிசீலித்தது. பின்னர், முன் கார் சாகுபடிக்கான பரப்பை முடிவு செய்யும் பொதுவான பிரச்சினை குறித்துப் பொதுப்பணித் துறையின் 12—11—1960 ஆம் நாளிட்ட 2011 ஆம் எண் ஆணையில் கீழ்க்கண்டவாறு அரசு ஆணைகளைப் பிறப்பித்தது :

1. மேல் கால்வாய்ப் பகுதிகளில் முறையான கார் சாகுபடிக்கான விதைப் பாத்திகளை அமைப்பதற்காக பாபநாசம்